Regd. No. M. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 | ஈரோடு 4-10-1947 சனிக்கிழமை | மலர் 4.

## காந்தியாரின் உண்மைஞானம்

(பெரியார் ஈ. வெ. ரா.)

★

1926ஆம் மேமீ 3 வது வாரத்தில் வந்த "யங் இந்தியா" என்கின்ற பத்திரிகையில் "தீண்டாதார்களை மற்ற இந்துக்கள் தங்களுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் அவர்கள் மாட்டிறைச்சி தின்பதில்லை என்று முதலில் உறுதிகூற வேண்டும்" என்று ஒரு சனாதன இந்து எழுதியிருந்த கடிதத்துக்குப் பதில் என்பதாகக் காந்தியார் எழுதியிருந்த நீண்ட கட்டுரையின் முக்கிய குறிப்புகளாவன:-

இந்துமத தத்துவங்களுக்கு வளர்ச்சியும் தேய்வும் உண்டு.

ஒருவகையில் அது சாஸ்திர ஆதாரங்களைக் கொண்டது.

மற்றொரு வகையில் அது சாஸ்திர ஆதாரங்களைக் கடந்தது.

ஏனெனில் இந்து மதத்துக்கு என்று ஒரு குறிப்பிட்ட தனி நூல் கிடையாது

இந்துக்கள் கீதையைப் போற்றுகிறார்கள் என்றாலும் கீதையும் வழிதான் காட்டுகிறது. பழக்கத்தை மாற்றுவதற்கு கீதையினாலும் முடிவதில்லை.

இந்து மதம் கங்கைக்கு ஒப்பானது. அதில் பல அழுக்குகள் வந்தடைந்து இருக்கிறது.

சாஸ்திரங்கள், வேதங்கள் உபநிஷத்துக்கள், இதிகாசங்கள் இவைகள் எல்லாம் ஒருவரால் சொல்லப்பட்டதென்றோ ஒரே காலத்தில் உற்பத்தி ஆனதென்றோ சொல்ல முடியாது.

அந்தந்த கால நிலைமைக்கு ஏற்றபடி அவ்வப்போது உள்ளவர்களால் எழுதப்பட்டவைகளாகும். அன்றியும் அவை ஒன்றோடொன்று முரண்பட்டவைகளுமாகும்.

அப்படியிருந்தாலும் இந்த வேத சாஸ்திராதிகள் எல்லா காலத்துக்கும் புதிய நிலைமைகளுக்கும் ஏற்றவைகளுமல்ல.

இவை எழுதப்பட்ட காலத்தில் இருந்து வந்த தன்மைகளையே விளக்குபவைகளாகும்.

ஏதோ ஒரு காலத்தில் நல்லது என்று யாராலோ கருதப்பட்ட ஒரு காரியத்தை வேத சாஸ்திரம் சொல்லுகிறது என்பதற்கு ஆக குருட்டுத்தனமாகப் பின்பற்றி நடக்கக்கூடாது.

ஒரு காலத்தில் யாகத்திற்குச் செய்யப்பட்ட உயிர்பலியையும் நம் மூதாதையர்கள் மாட்டிறைச்சி தின்றதையும் இப்பொழுதும் நாம் செய்யவேண்டுமா?

ஒரு பெண் பல புருஷர்களை ஒரே காலத்தில் மணம்புரிந்து கொள்வது அக்காலத்தில் இருந்திருந்தால் இப்போதும் நாம் அப்படிச் செய்யலாமா?...............

என்பதுஆக எல்லாம் கூறிவிட்டு பிறகு ஆத்மஞானத்தைப்பற்றிப் பேசித் தனது கொள்கைகளை வலியுறுத்திவிட்டு மாட்டிறைச்சி தின்பதால் ஒருவர் மட்டமல்லவென்றும் கூறி,

சத்தியம், அஹிம்சை நல்லொழுக்கம் ஆகிய இவைதான் இந்து மதம் என்றும், மாம்சம் புசிப்பதற்கும் மதத்திற்கும் சம்மந்தமில்லை என்றும்கூறி முடித்திருக்கிறார்.

இதில் நமது கருத்து என்னவென்றால் மேல்கண்டவைகளை எல்லாம் நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம் என்றாலும்,

சத்தியம், அஹிம்சை, ஒழுக்கம் என்பவைகளுக்கு அளவுகருவி எது?

இவைகளுக்குப் பாஷ்யக்காரர் காந்தியாரேதானா? எல்லா காலத்துக்கும் எல்லோருக்கும் சத்தியம் அஹிம்சை ஒழுக்கம் ஒன்றே ஆகுமா? என்பனவாதியவைகளை தங்கள் தங்கள் சொந்தப் புத்தியைக்கொண்டு சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்.

---

## ஏஜண்டுகள் தேவை.

நம் "குடி அரசு" பத்திரிகைக்குக் கீழ்க்கண்ட ஊர்களுக்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

அரக்கோணம்
அம்பாசமுத்திரம்
பெங்களூர் சிட்டி
கடம்பூர்
காவேரிப்பாக்கம்
நாமக்கல்
பண்ருட்டி
சங்கரி துர்க்கம்
சீர்காழி
உடையார்பாளையம்
குத்தாலம்
ஆடுதுறை
வாடிப்பட்டி

மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.

# ஆஸ்திகர்களே! என்ன கூறுகிறீர்கள்?

(ஈட்டி எழுதுவது)

★

சுயமரியாதைக்காரர்கள் கடவுள் இல்லை, சாதி சமயம் இல்லை என்னும் கயவர்கள். வேத சாஸ்திரங்களையும் இதிகாச புராணங்களையும் மறுக்கும் விவேகமற்றவர்கள், நாஸ்திகர்கள் என்று கூறும் ஆஸ்திகர்களே!

சுயமரியாதைக்காரர்களைக் குறைகூறவும், வாயில் வந்தவாறு திட்டவும் பழகிக்கொண்டிருக்கிறீர்களேயல்லாமல் உண்மை என்ன என்பதை ஒருபோதாவது சிந்தித்தீர்களா?

மக்களது உழைப்பின் பயனை உறிஞ்சுவதற்காகவே சாதியும் சமயமும் திராவிடர்க்கிடையே புகுத்தப்பட்டன. மக்களைத் தத்தம் நிலையை யறியவொட்டாமல் மிருகங்களாக்குவதே இதிகாசங்களும் புராணங்களும். இழிநிலையில் வாழவேண்டியதே இறைவனின் கட்டளையாகும் என எண்ணச்செய்வதே வேதங்களும் சாஸ்திரங்களும். மக்கள் மானத்தை விட்டொழித்து மண்ணுலகில் மெய் மறந்து வாழவேண்டுமென்பதற்காகப் படைக்கப்பட்டதுதான், விசித்திரமிக்க கடவுளர்கள். இவை சுயமரியாதைக்காரன் கூறுவதுதான்.

இந்த மாதிரி, சுயமரியாதைக்காரன் கூறுவது பொய்யா? உலகத்தில் யாராயிருந்தாலும் அனைவருக்கும் அறிவுண்டு எனக் கூறுகிறவன் சுயமரியாதைக்காரன். ஆகலால் அறிவுபெற்று விளங்கும் ஆஸ்திகர்களே! சிந்தியுங்கள்! நன்றாக சிந்தியுங்கள்!

“கொள்ளை வினைக்
கூட்டுறவால்
கூட்டிய பல் சமயக்
கூட்டமும் அக்
கூட்டத்தே கூவுகின்ற
கலையும்,
கள்ளமுறும் அக்கலைகள்
காட்டிய பல்
கதியும், காட்சிகளும்,
காட்சிதரு கடவுளரும்
எல்லாம் பிள்ளை
விளையாட்டு” என்று
பேசுகின்றவர் யார் தெரியுமா?

“நால் வருணம் ஆச்சிரம-ஆசாரம் முதலாம் நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டு” என்பவர் யார்?

“இயல் வேதம் ஆகமங்கள்
புராணங்கள்
இதிகாசம் இவைமுதலா
இந்திரசாலம் கடையாய்
உரைப்பர்
மயலொரு நூல் மாத்திரந்தான்
சாலமென அறிந்தார்
மகனே நீ நூல் அனைத்தும்
சாலமென அறிக” என்று
சாற்றுபவர் யார் தெரியுமா?

“நான்முகர் நல் உருத்திரர்கள்
நாரணர் இந்திரர்கள்
நவில் அருகர் புத்தர் முதல்
மதத்தலைவர் எல்லாம்
தேன் (மது) முகர்ந்து உண்டவர்
எனவே விளையாடா நின்ற
சிறு பிள்ளைக்கூட்டமே”யாம்
என்று செப்புகின்றவர் யார்?
தெரியுமா?

இருட் சாதித் தத்துவச்
சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில்
எருவாக்கிப் போட்டு
மருட் சாதி சமயங்கள்
மதங்கள் ஆச்சிரம
வழக்கமெலாம் குழிக்கொட்டி
மண் மூடிப் போட்டு”

என்று சாத்திரங்களை எரித்துச் சாம்பராக்கி எருவாக்குக என்றும் மதங்களையும் வருணாசிரம வழக்கங்களையும் குழியில் கொட்டி மண்மூடிப் புதைக்க வேண்டும் என்றும் கூறுகின்றவர் யார்? தெரியுமா?

“மதத்திலே சமய வழக்கிலே
மாயை மருட்டிலே
இருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்து
வீண் பொழுது கழிக்கின்றார்”
எனவும்,

“குலத்திலே சமயக் குழியிலே
நரகக் குழியிலே
குமைந்து வீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கி
ஏமாந்து நிற்கின்றார்”

எனவும், உங்களின் உண்மையான நிலையை உரைப்பவர் யார்? தெரியுமா?

“சாதியிலே மதங்களிலே சமய
நெறிகளிலே சாத்திரச் சந்தடி
களிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து
அலைகின்ற உலகீர்”

என்று உங்களை அழைத்து

“அலைந்தலைந்து வீணே நீர்
அழிதல் அழகலவே”

என்று உங்கள் நிலைக்கு மனமிரங்குபவர் யார் தெரியுமா?

இவ்வாறு கூறுகின்றவர் சுயமரியாதைக் கவிஞரல்ல. ஆஸ்திகர்களாகிய உங்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரான வடலூர் இராமலிங்க சுவாமிகளாவார்.

இவர் இவ்வாறு எழுதி வைத்திருக்கும் நூலைத் திருஅருட்பா எனச் செப்பி, மாலையைச்சாற்றி மண்டியிட்டு வணங்குகின்றீர்கள். இக்கருத்தை எடுத்துக் கூறுகின்றவர்களை மருளர் என்றும் செப்பி மண், கல்லை வாரி எறிந்து மல்லுக்கு நிற்க வருகின்றீர்கள்.

இப்பொழுது என்ன கூறுவீர்கள்? சுயமரியாதைக்காரர்கள் கயவர்களா? விவேகமற்றவர்களா? புரட்டர்களா? நாஸ்திகர்களா?

சுயமரியாதைக்காரர்களைக் குறை கூறும் ஆஸ்திகர்களே உங்களின் உண்மையான நிலை என்ன என்பதை நீங்களே சிந்தித்து முடிவு கட்டுங்கள்.

சைவ மெய்யன்பர்களே! நீங்களும் சிந்தியுங்கள். சிந்தித்துத் தெளிவடைய முடிகிறதா எனப் பாருங்கள்!

---

## மரணம்

குடந்தை திராவிடர்கழக நிர்வாககுழு அங்கத்தினரும், பிரபல வியாபாரியுமான தோழர் வி. பராங்குசம் அவர்கள் தந்தையும், முன்னாள் டவுன்ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டருமான திரு ஆர். வேணுகோபால் நாயுடு அவர்கள் 30-9-47ல் இயற்கையெய்தினார்.

# ஈரோட்டில் காங்கரசுக்குப் படுதோல்வி

## சட்டசபை மெம்பரும், மாஜி சேர்மனும் டிபாசிட் இழந்தனர்.

★

ஈரோடு முனிசிபாலிட்டியில் 24-கவுன்சிலர் ஸ்தானங்கள் உண்டு. அவைகளில் காங்கரசல்லாதாருக்கு 4 ஸ்தானங்களும், காங்கரஸ்காரருக்கு 3-ஸ்தானங்களும் போட்டியில்லாமல் கிடைத்தன. பாக்கி 17-ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது.

17-ஸ்தானங்களில் சுயேச்சையாக நின்ற தோழர்கள் 12-பேரும், காங்கரஸ் அபேட்சகர்கள் 5-பேருமே வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகக் கணக்குப்போட்டால் சுயேச்சைத் தோழர்கள் 16-பேரும், காங்கரஸ் அபேட்சகர்கள் 8-பேருமாகக் கவுன்சிலர்களாகியிருக்கிறார்கள்.

மேற்சொன்னவைகளின் விபரம் கீழ் வருமாறு—

1-வது வார்டு. ஓட்டுகள்.
K. M. சீனிவாசம்பிள்ளை (கா) 135
ராஜரத்தினம் (சு) 126

2-வது வார்டு:
K. N. துப்புசாமி பிள்ளை (சு) 263
K. M. சுப்பிரமணியம் (கா) 103

3-வது வார்டு:
K. P. ஆறுமுகம் (கா) 188
முத்துகிருஷ்ணன் (சு) 171

4-வது வார்டு:
S. K. சென்னியப்ப கவுண்டர் (சு) 186
நாராயணசாமி (சு) 168
பழனிப்பெருமாள் (கா) 148
● மாஜி சேர்மன் டி. சீனிவாச முதலியார் (கா) 61

5-வது வார்டு:
அப்துல் சத்தார் சாயபு (சு) போட்டியில்லை.

6-வது வார்டு:
நீலகண்டஞ் செட்டியார் (சு) 86
சீனிவாசஞ்செட்டியார் (சு) 80
காந்திசாமி (கா) 71

7-வது வார்டு:
கணபதிசுப்பிரமணிய அய்யர் (கா) போட்டியில்லை.

8-வது வார்டு: (2-ஸ்தானங்கள்)
E. V. K. சம்பத் (சு) 113
S. V. முத்து (கா) 49
S. R. கண்ணம்மாள் (சு) 98
அலமேலு அம்மாள் (கா) 50

9-வது வார்டு:
S. R. சந்தானம் (சு) 140
R. C. ஷண்முகம் (கா) 93

10-வது வார்டு: [2 ஸ்தானங்கள்]
M. K. K. ரஜாக் (சு) போட்டியில்லை.
வீரபத்திரபிள்ளை (சு) 296
இருளப்பபிள்ளை (கா) 123

11-வது வார்டு:
ஏ. முத்தய்யா (சு) 212
சக்கரபாணி ரவுத்து (சு) 135
தேவராஜ் (கா) 59

12-வது வார்டு [2-ஸ்தானங்கள்]
என். வெங்கிடாசலம் [கா] 385
கூடுமியான்சாயபு [சு] 244
இன்னாசிமுத்து [கா] 341
துரைசாமிபிள்ளை [சு] 158
ஆர். லூர்துசாமி [சு] 136
வக்கீல் அற்பகசாமிபிள்ளை [சு] 131

13-வது வார்டு [2 ஸ்தானங்கள்]
எச். பாக்ஷா சாயபு [சு] 225
செல்வநாயகம் [சு] 166
● M. A. ஈஸ்வான் M. L. A. (சட்டசபை மெம்பர்) [கா] 34
கணபதி [சு] 195
வையாபுரி [சு] 155
● சுந்தரம் [கா] 23

14-வது வார்டு:
செங்கோட கவுண்டர் [கா] போட்டியில்லை.

15-வது வார்டு:
பழனிசாமிக் கவுண்டர் [சு] 306
எஸ். ப. கருப்பணன் [கா] 206

16-வது வார்டு:
சுப்பிரமணியம் [கா] போட்டியில்லை.

17-வது வார்டு: [2 ஸ்தானங்கள்]
E. O. C. முத்துசாமிக் கவுண்டர் [சு] போட்டியில்லை.
R. J. முஹம்மது யாகூப் [சு] போட்டியில்லை.

18-வது வார்டு:
ஜெகநாதன் [கா] 363
சுப்பராயன் [சு] 332

19-வது வார்டு:
கேசவலால் [சு] 124
ஆர். சி. கிருஷ்ணன் [கா] 123

● டிபாசிட் இழந்தவர்கள்.

சுயேச்சையாகத் தேர்தலுக்கு நின்றவர்களுக்குள் கட்டுப்பாடு இருந்து காங்கரஸ் அபேட்சகருக்குப் போட்டியாக யாரோ ஒருவர் மட்டுமே நிற்பதென்ற முறையில் ஏற்பாடுசெய்து எல்லா வார்டுகளிலும் நல்ல முறையில் பிரசாரமும் நடைபெற்றிருக்கவேண்டும் என்பதுடன் முஸ்லிம் லீக் சில வார்டுகளில் காங்கரசாரை ஆதரிக்காமலும் இருந்திருப்பார்களானால் காங்கரஸ் இன்னும் படுதோல்வியடைந்திருக்கும் என்பதோடு ஒரு ஸ்தானம்கூட வெற்றிபெற்றிருக்க முடியாது என்பதை மேற்படி புள்ளி விபரங்களிலிருந்தே நன்கு தெரிந்துகொள்ளக் கூடும்.

அது ஒருபுறமிருக்க, வெற்றிபெற்ற சுயேச்சைத் தோழர்கள் 16பேருமாவது ஒற்றுமையாகவும், கட்டுப்பாடாகவும் இருந்து சேர்மன், வைஸ்சேர்மன் தேர்தல்களை நடத்துவார்களா? என்றால் அது விஷயத்தில் உறுதி சொல்வதற்கில்லாத மாதிரியில் இங்குள்ள காங்கரசல்லாத தலைவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவும், போட்டி மனப்பான்மையும் இருந்துவருகிறது. இதன் விளைவாக காங்கரசாரோ அல்லது காங்கரஸ் ஆதரவு பெற்றவரோ சேர்மனாக வரக்கூடும் என்றபோதிலும் அதன் நிலை "பிரகாசம் மந்திரிசபை"போல்தான் முடியும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். ஏனென்றால், சுயேச்சைத் தோழர்களுக்குள் இரண்டு கட்சிகள் ஏற்படுமானால் காங்கசார் பெரியவர்க்கு மைனாரிட்டி என்ற போதிலும் அவர்கள் யாரை ஆதரிக்கிறார்களோ அவர்களுக்குத்தான் மெஜாரிட்டி என்ற நிலைமை ஏற்படும்பொழுது "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பதுபோல் காங்கரசார் இஷ்டப்படி சேர்மனாவதும், மாறுவதுமான நாடகம் நடந்துகொண்டுதானிருக்கும். இந்த நிலைமைக்கு சுயேச்சைத் தோழர்கள் ஆளாகப்போகிறார்களா? அல்லது இந்நிலைமையிலாவது ஒன்றுபட்டு கௌரவத்தைக் காப்பாற்றப் போகிறார்களா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## வேண்டுகோள்.

இயக்கப் பொதுக்கூட்டச் செய்திகள், திருமணச்செய்திகள், அதற்காக அனுப்பப்படும் நன்கொடைகள் ஆகியவற்றைத் தயவுசெய்து சென்னை "விடுதலை" ஆபீசுக்கே அனுப்பிவிட வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

### ஏஜண்டு தோழர்களுக்கு

★

இம்மாதம் 1ந்தேதியில் அனுப்பப்பட்டிருக்கிறது. 10ந் தேதிக்குள் தொகை அனுப்பாதவர்களுக்கு முன்னறிவிப்பு இல்லாமலேயே பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடப்படும்.

—மானேஜர்.

குடிஅரசு

4–10–47 சனிக்கிழமை

## காங்கரஸ் சரிவு

சுயராஜ்யத்திற்காகவும், வெள்ளையனை விரட்டுவதற்கு ஆகவும் என்பதாகச் சொல்லிக் கொண்டு பாமரமக்களை ஏமாற்றி வஞ்சித்து வடநாட்டு முதலாளிகளின் கொள்ளை வாழ்க்கையும், பார்ப்பனர்களின் பாடுபடாத போக போக்கிய வாழ்வையும் பெருக்கிக் கொண்டு வந்த காங்கரஸ் என்னும் சுயநலசூழ்ச்சி ஸ்தாபனத்துக்கு உலக மகாயுத்தத்தின் காரணமாய் சுயராஜ்யம் பெறவேண்டிய அவசியமோ அல்லது வெள்ளையனை விரட்ட வேண்டிய அவசியமோ இல்லாமல் போய்விட்டதால் அதன் (காங்கரசின்) நிலைமை மிக்க ஆபத்தான காரியமாய் ஆகிவிட்டது.

அதாவது,

ஆகஸ்டு 15ந் தேதிக்கு அப்புறம் காங்கரஸ் (இந்திய தேசிய காங்கரஸ்) ஸ்தாபனம் எதற்குஆக இனியும் இருக்கவேண்டும்? என்கின்ற பிரச்சினைக்குப் பதில் சொல்ல காங்கரசில் காந்தியார், நேருவாள் முதல், எவருக்குமே வகையில்லாமல் போய்விட்டது. இதனால் காங்கரஸ் தியாகிகளும் தொண்டர்களும் இப்போது தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொண்டு விழிக்கின்றார்கள்.

காங்கரசுக்கு இனி அங்கத்தினர்கள் சேர்ப்பது எதற்கு? காங்கரசுக்கு காங்கரஸ்காரர்களே செய்யவேண்டியதான வேலை என்ன இருக்கிறது? சேர்க்கப்படும் மக்களிடம் இனி எந்தக்கொள்கைக்கு-வேலைத் திட்டத்திற்கு சம்மதம் வாங்கி, அல்லது என்ன நிபந்தனைக்குச் சம்மதிக்கச்செய்து கையெழுத்துவாங்கி அங்கத்தினர் ஆக்குவது? என்பன போன்ற பிரச்சினைகள் அங்கத்தினராய் சேர்க்கப்படுவதற்கும் அங்கத்தினர் ஆவதற்கும் பெருந் தடையாய் இருந்து வருகின்றன.

இப்பொழுது ஆங்காங்குள்ள சில காங்கரஸ் பிரமுகர்களுக்கும் தீவிர சுறுசுறுப்பும் அதாவது, காங்கரஸ் பேரால் அல்லாமல் வேறு வழியில் பிழைக்க வசதியோ தகுதியோ அல்லாத தோழர்களுக்கும் வெளியில் தலைகாட்டிக்கொண்டு தேசபக்தனாய் தியாகியாய் வீராப்புப் பேசிக் கொண்டு மற்றவர்களைவிட தான் ஒரு மேலான பிறவி என்று காட்டும் சின்னமாக சிலலட்சியச் சொல் சொல்லிக்கொண்டு அசம்பாவமாய்த் திரிவதற்கு வசதி இல்லாமல், எவரையும் குறை கூறிக்கொண்டு வம்பளப்பதற்கும் வாய்ப்பில்லாமல் தவிக்கும்படியானநிலை ஏற்பட்டுவிட்டது.

காங்கரசுக்கு விரோதமாய்க் காரியங்கள் செய்து காங்கரஸ் சர்க்காரால் தண்டிக்கப்பட்ட "தேசத்துரோக" கைதிகள் எல்லாம் கூட இனி தேசத்துரோகம் செய்ய இடமில்லை என்கின்ற காரணம் கொண்டு விடுதலை செய்யப் பட்டுவிட்டபடியால் இனி தேசத்துரோகிகள் என்று எவரையும் வையவோ எந்தக் கூட்டங்களிலாவது கலவரம் குழப்பம் முதலிய செய்யவோ இடமில்லாமல் போய்விட்டது.

ஆகவே இனி காங்கரஸ் ஸ்தாபனம் என்பதாக ஒரு ஸ்தாபனம் இங்கு இருக்கவேண்டுமானால் இந்திய தேசிய காங்கரஸ் என்கின்ற பெயரோ அல்லது எல்லா இந்திய காங்கரஸ் என்கின்ற பெயரோ இல்லாமல் வேறு பெயர் வைத்து அதற்கேற்ற புதிய திட்டங்கள் ஏற்படுத்தி இளைஞர்களையும் சமய சஞ்சீவிகளையும் கைக்குள் வைத்துக்கொண்டு புதியமுறையில் வஞ்சகமோ பித்தலாட்டமோ செய்யவேண்டிய அவசியம் வடநாட்டு பிர்லா கூட்டத்திற்கும் நம்நாட்டுக்கும் பார்ப்பனர்களுக்கும் ஏற்பட்டு விட்டது.

இன்றைய நிலையில் காங்கரசைக் கலைத்துவிட்டால் உண்மையில் வெகு குடும்பம் மகா மகா கஷ்ட மடையவேண்டி வந்துவிடும். பார்ப்பனர் சங்கதி அதைவிட ஆபத்தாகிவிடும். வடநாட்டு முதலாளிகள் சங்கதி மிக மிக பரிதாபத்திற்கு உரியதாக ஆகிவிடும். ஆதலால் காங்கரஸ்காரர்கள் தலைவர்கள் வாலர்கள் தியாகிகள் தொண்டர்கள் உள்பட வெகு சாமர்த்தியமாக வேறொரு முக்கியமான கொள்கையை காங்கரஸ் கொள்கையாக ஆக்குவதற்கு இப்போது முயற்சித்து வருகிறார்கள். இந்துஸ்தான் யூனியனில் திராவிடநாடு (சென்னை மாகாணம்)தவிர மற்ற இடங்களில் அக்கொள்கைகள் (புதுக்கொள்கைகள்) பரப்பப்பட்டும் மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டும் ஆகிவிட்டதென்றேசொல்லலாம். அதென்னவென்றால், அதுதான் இந்துமுஸ்லிம் கலவரங்களைக் கொள்ளை கொலை நாசவேலை ஆகியவைகள் தீவிரமாக நடக்கும்படியும் இல்லாத இடங்களில் உண்டாக்கும்படியும் செய்வதாகும்.

இதை மனதில் வைத்தே காங்கரஸ் தலைவர்களும் காங்கரஸ் பத்திரிகைகளும்,

"சுயராஜ்யம் வந்து விட்டதாலேயே இனி காங்கரசுக்கு வேலை இல்லை என்று சில வகுப்புவாதிகள் வகுப்புக் கிளர்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். காங்கரஸ் இவர்கள் பேச்சைக்கேட்டு ஏமாந்துபோகாது வகுப்புக்கிளர்ச்சிகளை ஒழிக்கும் வேலை செய்ய வேண்டி இருப்பதால் காங்கரஸ் இருந்துதான் தீரும்"

என்பதாகப் பேசியும் எழுதியும் வருவதோடு இரகசியமாக (அண்டர் கிரவுண்டு வேலை அதாவது) முக்காட்டு வேலை செய்தும் வருகிறார்கள். இதற்கென்று சில இடங்களில் பயிற்சி அளித்து வருவதாகவும் ஏராளமான பணமும் ஆட்களும் ஆயுதங்களும் இறக்குமதி ஆகி இருப்பதாகவும் தெரிகிறது. ஆனால் இந்த முயற்சியில் காங்கரஸ்காரர்கள் ஒரு நாளும்

வெற்றியடையப் போவதில்லை என்பதை திர்க்க தரிசனம் போல் கூறுவோம். காரணம் என்னவென்றால் காங்கரசே நம் நாட்டில் சரிந்து வருகிறது. இந்நிலை யாரால் ஏற்பட்டு இருந்தாலும் இயற்கை நிலைமை பொதுவாகவே பொதுமக்களுக்குக் காங்கரசின்மீது வெறுப்பும் புளிப்பும் ஏற்படும்படியாக இருந்து வருகிறது.

வயிறாரச் சோறு கிடையாது. இடுப்பாரத் துணி கிடையாது. கள்ள மார்க்கட் என்னும் வியாபாரிகள் கொடுமை மக்களால் சகிக்க முடியவில்லை. விவசாயிகள்படும் அல்லல்-ஏழைக் கூலி மக்கள் படும் மிடிமை, தொல்லை கொஞ்சநஞ்சமல்ல. எருவில்லை, விதைப்பண்டம் இல்லை. விளைவித்த கூலியோ மிராசுதாரனோகூட வயிறாரச்சாப்பிட முடியாமல் காட்டு ராஜாக்களான லைசென்சுதார்கள் கொள்ளை அடித்து மூட்டைகட்டுகிறார்கள். காங்கரசினபோரால் சிலவன்னெஞ்சர்கள் கதரைக்கட்டிக்கொண்டும், காங்கரஸ் மூவர்ணக் கொடி பேட்ஜை மார்பில் குத்திக் கொண்டும், கொடியைத் தங்கள் வீடு, கடைகள் மீது பறக்க விட்டுக் கொண்டும் அடிக்கும் கொள்ளைக்கும் மக்களைப் படுத்தும் இம்சைக்கும் எல்லையே இல்லை. கேள்வி கேட்பாடற்ற பார்ப்பன ராஜ்யமாக ஆகிவிட்டதால் யோக்கியமாய், நாணயமாய் நடக்கும் அதிகாரிகள் நாட்டில் என்ன அக்கிரமம், அயோக்கியத்தனம் நடந்தாலும் தலை மறைவாய் எதிலும் பட்டுக்கொள்ளாமல் ஜாக்கிரதையாய் தப்பித்துக்கொள்ளவேண்டி இருப்பதால் காலிகளுக்கு காலித்தனம் க்லாடித்தனம் செய்ய மிக்க வசதி ஏற்பட்டு விட்டது.

எனவே பொது மக்கள் வெகு சாதாரண பாமர மக்கள் முதல் மரியாதையும் நாணமும் உள்ள சாது, பெரிய மனிதர்கள், அறிவாளிகள் என்பவர்கள் வரை காங்கரசென்றால் வெறுக்கவும் சபிக்கவும் வெகு ஆத்திரமாகப் பழிக்கவும் செய்து வருவது மிக சகஜமாகக் காணப்படுகிறது.

இவ்வளவும் போதாக்குறைக்கு காங்கரஸ் காரர்களுக்குள்ளாகவே நடந்துவரும் கோரமான ஆபாசமான போட்டியும், போராட்டமும்பற்றிச் சொல்லுவதென்றால் அது ஒரு பெரும் கசுமால களஞ்சியத்தைக் கழுவி விடுவது போன்ற அசிங்கமான காரியமாக இருக்கும். இவைகளையெல்லாம் பிரத்தியட்சமாய் எடுத்துக்காட்டுவதற்கும் மக்கள் அறிந்து கொள்ளுவதற்கும் நல்லதொரு வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தது என்று சொல்லும்படியாகவே இவ்வாரம் தமிழ் நாட்டில் பல இடங்களில் நடந்த முனிசிபல் கவுன்சில் தேர்தல்கள் காட்சி அளித்தன. இதன் நடவடிக்கைகளையும் முடிவுகளையும் சரியாய் உணர்ந்தவர்கள் யாராய் இருந்தாலும் காங்கரஸ் மணல் வீடு சரிவது போல் வேகமாய் சரிந்து கொண்டு இருப்பதை உணருவார்கள்.

முதலாவது காங்கரஸ்காரர்கள் இத்தேர்தலில் முக்கியமாய்க் கையாண்ட முறை என்னவென்றால் என்ன காரியம் செய்தாவது வெற்றிபெற வேண்டும் என்பதாகும். இதன் பயனாய் காங்கரசார் நாணயப், ஒழுக்கம், கட்டுப்பாடு, சத்தியம் என்பனவாகிய மனிதத்தன்மைகள் ஒன்றுகூட இல்லாமல் வெறியாட்டம் ஆடித் தீர்த்தார்கள்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஈரோடு முனிசிபாலிடி தேர்தலை எடுத்துக் கொள்ளுவோம். ஈரோடு காங்கரசு தேர்தல் காரியத்தில் ஒரு பார்ப்பனர் நன்றாகத் தனது ஆரியக் கூத்தைப் பயன் படுத்தினார். இதற்குப் பல பார்ப்பனர்கள் உடந்தையாக இருந்து சூழ்ச்சி செய்தார்கள். அதன் பயனாக பார்ப்பனரல்லாத காங்கரஸ் கமிட்டி தலைவரும் காங்கரஸ் பெருமை உள்ள M. L. A. ஒருவரும் பொதுமக்கள் முன்னிலையில் வெகு சின்னப்படுத்தப்பட்டு விட்டார்கள். காரணம் இருவரையும் சேர்மென் ஆக்குவதாக பார்ப்பனர் ஆசை கொடுத்து ஒருவருக்கொருவர் சிரிக்கும்படியான விரோதிகளாக ஆக்கி மத்தியில் தான் சேர்மன் ஆகிவிடலாம் என்கின்ற பேராசை கொண்டு பெரியதொரு விளையாட்டு விளையாடப்பட்டு விட்டது. வெகு நாள் சூழ்ச்சியாகவே இந்தவிளையாட்டு நடந்ததால் ஈரோடு காங்கரசுக்குள் இருந்துவருபவர்களில் தகுதியும், கவுரவமும் உள்ள பலருக்கு ஓட்டில்லாமலே செய்யப்பட்டு விட்டதுமுதல் சூழ்ச்சியாகும். இதனால் Dr. L. K. முத்துசாமி, மாஜி சேர்மன் தோழர் R. K. வெங்கிடுசாமி, எஸ். கே. ராமசாமி முதலிய முக்கியஸ்தர்களுக்கெல்லாம் ஓட்டில்லாமல் செய்தார்கள். அடுத்தாற்போல் நிறுத்தப்பட்ட தோழர்களும் மேற்கண்ட 2-பேர்கள் அதாவது தோழர்கள் ஈஸ்வரன், கணபதிசுப்பிரமணிய அய்யர் ஆகியவர்கள் தவிர மற்றவர்கள் சேர்மென் பதவிக்கு நினைக்கக்கூட முடியாதவர்களும் ஆசைப்பட முடியாதவர்களுமே பார்த்து நிறுத்தப்பட்டார்கள். அட்ஹாக் கமிட்டி நியமனத்தின் போதே ஈரோடு காங்கரஸ் கமிட்டித் தலைவருக்கும் M. L. A. பிரமுகருக்கும் கட்சி ஏற்பட்டு தனித்தனி கட்சிசேர்ப்பதில் ஆபாசமாய் நடந்து கொள்ளவும் மரியாதையும் பொறுப்புமுள்ள காங்கரஸ் பிரமுகர்கள் தங்கள் பேர் ஓட்டர் லிஸ்டிலேயே இல்லாமல் செய்யப்பட்டு விட்டபடியால் எப்படியோ நாசமாகப் போகட்டுமென்று அசார்சமாய் இருந்து விட்டதால் லிஸ்ட் போடும்போதே ஒருவருக்கொருவர் அடிதடி கலகம் முதலியவைகளோடு தேர்தல் அபேட்சகர்கள் லிஸ்ட் துவக்கமாகிற்று. இதில் அட்ஹாக் கமிட்டியில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் சிலர் ஸ்லிப் போட மறுத்து விட்டார்கள், அட்ஹாக்கமிட்டியாரால் மறுக்கப்பட்ட சிலர் ஸ்லிப் போட்டார்கள். பிறருக்கு மறுத்தவர்களும் ஸ்லிப் போட்டார்கள். ஸ்லிப் போட்டபிறகு காங்கரசல்லாத சிலர் காங்கரஸ் காரர்களாக்கி, சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். சிலர் தங்கள் அபேட்சகர்கள் அல்ல என்று விலக்கப்பட்டார்கள். இந்தத் திருவிளையாடல்களோடு மாகாண தலைவர் காமராஜர் அவர்கள் 2, 3 தடவை ஈரோடு வந்து என்ன பைசல் செய்தும் யாரும் ஒப்பவில்லை. தேர்தல் நாள் நெருங்க நெருங்க, காங்கரஸ் மெம்பர்கள் ஓட்டின் ரேட்டை 5 ரூபாயில்

ஆரம்பித்துப் பெரிதும் 25, 30 ரூ. யும் சில ஓட்டுகளுக்கு 100 ரூ. வீதமும் உயர்த்தி விட்டார்கள். பொய் ஓட்டுகளைக் கொண்டு வந்து ஏராளமாய் குவித்துக் கொண்டார்கள். சுயேச்சை அபேட்சகர்களை சரிப்படுத்தி வாபிஸ் வாங்கிக்கொள்ளவும் செய்தார்கள். கடைசி கடைசியாய் சில தொகுதியில் லீக்குடன் சமரசம் பேசி லீக்குக்காரர்களின் ஓட்டுகளையும் பெற்றார்கள். என் செய்தும் பிள்ளை பிழைக்காமல் நல்ல ஒரு தோல்வி அடைந்தார்கள். அதாவது 24 ஸ்தானங்களில் 8 ஸ்தானமே பெற்றார்கள். இவர்களை எதிர்ப்பதற்குக் கட்சியே இல்லாமல் எதிர்ப்பவர்களிலும் கட்டுப்பாடில்லாமல் தனித்தனியாய் காங்கரசுக்கு ஒரு ஸ்தானத்திற்கு போட்டியாய் 2 பேர் 3 பேர், 4 பேர் போட்டியும் போட்டு காங்கரசுக்குத் தங்களை அறியாமலே வசதி செய்து கொடுக்கும் அவ்வளவு பலமற்ற போட்டி போட்டார்கள்.

இப்படியெல்லாம் செய்தும் காங்கரஸ் இந்த மாதிரி எல்லாம் செய்த ஸ்தானங்களிலேயே பெரிதும் தோல்வி அடைந்தது. தோல்வி என்றாலும் காங்கரஸ் அபேட்சகர்கள் M. L A. உள்பட மூன்று பேர் டிப்பாசிட்டையே இழந்தார்கள். காங்கரசின் பேரால் ஜெயித்தவர்கள் மிக சில ஓட்டுகளால் ஜெயித்தார்கள். காங்கரசில் தோற்றவர்கள் சுயேச்சையாய் ஜெயித்தவர்கள் வாங்கிய ஓட்டில் பகுதியும் பகுதிக்குக் கீழாகவும் வாங்கித் தோற்றார்கள்.

ஈரோடு முனிசிபாலிடியில் கருங்கல்பாளையம் என்பது காங்கரஸ் கோட்டை. அங்கு எதிர்க்கட்சியார்களை மீட்டிங்கு நோட்டீஸ் கொடுக்கப்போனாலும் உதைத்து அனுப்பிவிடுவார்கள். அவ்வளவு அஹிம்சாமூர்த்திகள், அவ்வளவு நாகரீக சிகாமணிகள் கொண்ட பிரதேசம் அது. திராவிடர் கழகத்தார் அங்கு உள்ளேசென்றதே கிடையாது. ஒன்று இரண்டு தடவை சென்றபோது அவர்களை முகப்பிலேயே அடித்துத் துரத்திவிட்ட வீரர்கள் பிரதேசம் அது. அங்கு காங்கரசுக்கு எதிராக 3 ஸ்தானங்களில் 3 பேர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. அதில் ஒரு ஸ்தானத்துக்குக் காங்கரஸ் அபேட்சகர் ஏராளமான பணம் செலவு செய்தும் நூற்றுக் கணக்கான ஓட்டுகளில் அதாவது பகுதி ஓட்டுகள்கூட வாங்க முடியாமல் தோல்வியுற்றார். காங்கரசின் பேரால் ஜெயித்த காங்கரஸ்காரர்கள் இருவரும் 9 ஓட்டிலும் 17 ஓட்டிலுமே ஜெயித்தார்கள். இந்த 3 தேர்தல் பிரசாரத்திலும் ரிசர்வு போலீஸ் காவல். அப்படியிருந்தும் இரத்தக்காயங்கள், கத்திக்குத்துகள் பல ஏற்பட்டனவாம்.

ஆலி ரயில்வே ஸ்டேஷன் வார்டுகளில் காங்கரசார் ஏராளமான 100க்கு மேற்பட்டதான பொய் ஓட்டுகளும் கம்யூனிஸ்டுகளின் நாணயக்குறைவான துரோகமான உதவியும் தாழ்ந்த ரக வேலைகளும்செய்து வெற்றிபெற வேண்டியதாயிற்று. மற்றபடி காங்கரசைத் தோற்கடித்த அபேட்சகர் பலர் இரட்டிப்பு ஓட்டுகள் வாங்கித் தோற்கடித்தார்கள். முஸ்லிம் லீக் காங்கரசை ஆதரித்தும் காங்கரஸ் அபேட்சகர் தோற்கடிக்கப்பட்டார் என்பதுதான் இங்கு மிகமிக குறிப்பிடப்பட்ட சேதியாய் நகர் முழுதும் பேசிக்கொள்ளப்படும் புதுரக சேதியாகும்.

ஏனெனில் காங்கரசுக்காரர்கள் முஸ்லிம்களுக்கு அந்த மாதிரி வாக்குக் கொடுத்துக் காரியம் சாதிக்கச் செய்த சூழ்ச்சியும் தோல்வியடைந்ததேயாகும்.

மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் ஈரோடு முனிசிபல் தேர்தலில் எல்லா வார்டுகளிலும் மொத்தம் ஓட்டுப்போட்ட ஓட்டர்கள் 6714. இதில் காங்கரஸ் பேரால் தோற்றவர்கள், ஜெயித்தவர்கள் ஆகிய யாவரும் பெற்றது, பொய் ஓட்டுகள் சுமார் 500 உள்பட 2398. சுயேச்சையாக நின்றவர்களில் தோற்றவர்கள், ஜெயித்தவர்கள் யாவரும் பெற்ற ஓட்டுகள் 4316 ஆகவே காங்கரசுக்கு ஈரோட்டில் தோல்விக்கும் வெற்றிக்கும் வெற்றியில் பகுதி அளவு பேதம் ஏற்பட்டு விட்டது. சேர்மெனாக வர நினைத்த தோழர் M. A. ஈஸ்வரன் M. L. A. அவர்கள் காலை முதல் மாலை வரை போலிங்கில் இருந்து எவ்வளவோ முயற்சித்தும தானும் தன்னுடன் இருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு அபேட்சகரும் டிபாசிட் இழக்கும் அளக்கும் "அரிஜனங்கள்" சாம்பலடித்து விட்டார்கள்.

இதில் மற்றொரு பெரும் அதிசயம் என்னவென்றால் தோழர் கேசவலால் சேட்டு தன்னைக் காங்கரஸ் தலைவர் காமராஜர் 2 தடவை வந்து கேட்டுக்கொண்டும் தனது அபேக்ஷையை வாபசு வாங்க மறுத்து விட்டதால் காங்கரஸ்காரர்கள் பெரும்பான்மை தோழர்கள் அந்த வார்டு போலிங் பூத்திலேயே அதிகக் கவனம் செலுத்தி 5, 6 ஆளாய் வைத்துக்கொண்டு வடநாட்டான் ஒழிக, காங்கரஸ் துரோகி ஒழிக, ஆகஸ்ட் துரோகி ஒழிக எனக் கூச்சல் போட்டுக்கொண்டே இருந்தார்கள். முஸ்லிம்கள் பெருவாரியாக இவருக்கு ஆதரவளிப்பதாகக்கூறி இருந்தார்களாம். அந்த ஆதரவை முக்கியமாக நம்பியே கேசவலால் காமராஜர் வேண்டுகோளை மறுத்துவிட்டார். அதனால் காங்கரஸ் பிரமுகர்கள் தங்கள் பலத்தை அங்கு செலுத்தினார்கள். அதனால் திராவிட கழக பிரமுகர் தோழர் சிக்கயநாயக்கர் இவரை ஆதரித்தார். கடைசி நேரத்தில் முஸ்லிம் ஓட்டர்கள் கட்டோடு காங்கரசை ஆதரிக்க முற்பட்டு சேட் ஏஜண்டிடம் நெம்பர் சீட்டு வாங்கிக்கொண்டுபோய் காங்கரசுக்கே பெரிதும் ஓட்டுப்போட்டார்களாம். அப்படி இருந்தும் காங்கரஸ் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தத் தேர்தலில் மற்றொரு விசேஷம் என்னவென்றால் வகுப்பு உணர்ச்சி தாண்டவமாடியது தான். அதாவது,

கன்னடியர் கன்னடியருக்கும், வடுகர் (அதாவது வடுகு பேசுபவர்கள்) வடுகருக்கும், கைக்கோள முதலியார்கள் கைக்கோள முதலியாருக்கும், ஒக்கிலிய கவுண்டர் (கன்னடம் பேசும் வேளாளர்) ஒக்கிலிய கவுண்டருக்கும், கொங்குவேளாளர்

கொங்கு வேளாளருக்கும், பழக்கார வேளாளர்கள் பழக்கார வேளாளருக்கும், கிருஸ்தவர்கள் கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்கள் முசல்மான்களுக்கும் என்பதாகக் கூட்டம் கூட்டமாக தெருக்களில் பவனி சென்று வகுப்பு மதப்பேர் சொல்லியே ஓட்டுக் கேட்டதும் அந்த உணர்ச்சிமீதே தேர்தல் நடந்ததும் ஊருக்குள் இன்று இந்த உணர்ச்சி தாண்டவமாடுவதும் மிக மிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈரோட்டின் நிலைமை இது என்றால் மற்ற ஊர்கள் நிலைமை எப்படி இருக்கும் என்பதைப் பொதுமக்களே ஊகித்துக்கொள்ளலாம். பொதுவாக இம்மாதிரி 'ஜனநாயகம்'' என்பது நாட்டில் மதப் பூசல், வகுப்புப் பூசல் ஆகியவைகளை உண்டாக்க முக்கிய ஆதாரமாய் இருப்பதால் சர்க்கார் இந்த முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டை எடுத்துவிட்டு அவசியமானால் வகுப்புப்படி இலட்சியப்படி நாமிநேஷன் கொடுத்து ஆலோசனைக் கமிட்டியாகவாவது ஏற்பாடு செய்துவிட்டால் வகுப்புப்பூசல், வகுப்பு மத உணர்ச்சிகளால் ஏற்படும்கெடுதிகள் ஒருவாறு தணிக்கப்படலாம். இதுவரை இல்லாத சில உணர்ச்சிகள் இத்தேர்தலில் உண்டாகி விட்டன. தவிரவும் அரசாங்கம் சுயராஜ்ய அரசாங்கமாக ஆகிவிட்டது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டபிறகு இந்தக் கீழ்த்தர ஜனநாயகம் எதற்காக இனி இருக்கவேண்டும் என்று கேட்கிறோம். பார்ப்பனர்கள் மிகக் குறைவானவர்களாகவும் அதிகப் பங்கு பெருகிற சுயநலக் கும்பலாகவும் இருப்பதால் அவர்கள் இம்மாதிரி சிஸ்மிஷம் (விஷமத்தனம்) செய்து மக்களைப் பிரித்து வைத்துத் தங்கள் நலனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதாகிறது. இப்படிப்பட்ட எவரும் இந்த மாதிரிதான் நடந்துகொள்ள வேண்டிவரும்.

ஆதலால் சுயராஜ்ய அரசாங்கத்தார் என்பவர்கள் சிறிதாவது பொறுப்போ, உள் நாணயமோ உடையவர்களாய் இருந்தால் இந்த ஸ்தலஸ்தாபன தேர்தல் தன்மையை பஞ்சாயத்துபோர்ட் உள்பட யாவற்றையும் உடனே எடுத்துவிடவேண்டியது அவசியமாகும். வயதுவந்த யாவருக்கும் ஓட்டுரிமையின்மீது சட்டசபைக்கு மாத்திரம் பொதுத் தேர்தல் அல்லது வகுப்புப்படி வகுப்பு எண்ணிக்கைப்படி தனித்தொகுதி தேர்தல் கொடுத்து விட்டால் வகுப்பு உணர்ச்சி காட்டி ஓட்டுக் கேட்கும் அவசியமே இல்லாமல் போய்விடும்.

ஆகவே காங்கரசின் சூழ்ச்சி இந்த ஆண்டுத் தேர்தல்களில் காங்கரசுக் கோட்டைகளுக்கே பெருந் தோல்வி ஏற்படக் கூடியதாகத் திரும்பிவிட்டதால் இனி காங்கரஸ் வீழ்ச்சிக்கு சரிவு ஏற்பட்டு விட்டதாகவே சொல்லலாம்.

மற்றும் இன்று காங்கரசின் தன்மை இருக்கும் யோக்கியதையைப் பார்த்தால் சீக்கிரம் காங்கரசை வேறு கூட்டத்தார் அதாவது இதுவரை காங்கரசுக்கு எதிரிகளாயிருந்த கூட்டத்தார் கைப்பற்றினாலும் கைப்பற்றி விடுவார்கள்போல் இருக்கிறது. இது ஒரு புது அதிசயக் கருத்தாக மக்களுக்குத் தோன்றலாம் என்றாலும் காரியத்தில் ஒரு மாற்றம் ஏற்படலாம் என்றே கருதுகிறோம்.

கம்யூனிஸ்ட்டு என்ற ஒரு கூட்டம் இந்நாட்டின் சமாதானத்துக்கும் நாணயத்துக்கும் பெருங்கேடாக இருந்துகொண்டு வடநாட்டான் கூலியாகவும் பார்ப்பானின் அடிமையாகவும் இருந்து உள் கரையான் போல ஏழை மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பெரிய தொல்லை விளைவிப்பதை ஒழிக்கவேண்டியது இனி திராவிடர்களுக்கு மிக முக்கியமான காரியமாகும். அவர்கள் பனியாக்கள் பார்ப்பனர்களின் ஒற்றர்கள் கூலிகள் என்பதை ஏழை மக்கள் மறந்துவிடக்கூடாது.

காங்கரஸ்காரர்கள் பல விதங்களில் கம்யூனிஸ்ட்டுகளைவிட யோக்கியர்கள் என்று கூறலாம். திராவிட இளைஞர்கள் அறிவு மயங்கி கம்யூனிஸ்ட் வேஷம் போட்டு காங்கரசை ஆதரிக்கும் முட்டாள் தனத்தில் துரோகத்தனத்தில் இருந்து விலகி காங்கரசையாவது வெளிப்படையாய் ஆதரிப்பது புத்திசாலித்தனமான ஒரு அளவுக்கு நாணயமான காரியம் என்றே சொல்லுவோம்.

ஈரோட்டில் பல கம்யூனிஸ்ட் தொழிலாளித் தோழர்கள், அக்கட்சிப் பிரமுகர்கள் தேர்தலில் நடந்து கொண்ட கூட ஒழுக்கத்தின் உள்தன்மையை அறிந்து அதிலிருந்து விலகி திராவிட கழகத்தில் சேர முன் வந்திருப்பது இதற்கு ஒரு சான்றாகும். இவற்றைப்பற்றி மறுமுறை எழுதுவோம்.

மதிப்புரை:

## திராவிடநாடு பிரிவினைப் பாடல்கள்.

எளிய சினிமா மெட்டுகளில் திராவிட நாடு பிரிவினையைக் காரணத்துடன் வற்புறுத்தும் பாடல்களும் பெரியார் மீது தாலாட்டும், அரசியல் முறைகுறித்துப் பத்து வெண்பாக்களும் இனிய முறையில் இயற்றப்பட்டு அழகிய காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளன. அருப்புக்கோட்டைத் தோழர் சிவ சண்முகசுந்தரம் அவர்கள் ஆதரவில் தோழர் எம். எஸ். ராமசாமி அவர்கள் இயற்றிய இந்நூலின் விலை அணா ஆறு. கிடைக்குமிடம்:- சிவ. சண்முகசுந்தரம், புளியம்பட்டி, அருப்புக்கோட்டை.


## அறிவிப்பு

நமது இயக்க சம்பந்தமான புத்தகங்கள் ஏராளமாக வெளியான போதிலும் அவைகளை ஒழுங்காக வரவழைத்துப் பொதுமக்களுக்குப் பயன்படும்படியான மாதிரியில் விற்பனை செய்ய எவ்வித ஏற்பாடும் இல்லாத காரணத்தினால் புத்தகங்கள் வெளியிடுவோருக்கும், வாசகர்களுக்கும் மிக அசௌகரியமாயிருந்து வருகிறது.

ஆகவே, எல்லோருடைய சௌகரியத்தையும் முன்னிட்டு நல்ல வெளியீடுகளின் விற்பனை உரிமை அல்லது சோல்ஏஜன்சியை நாங்கள் எடுத்துக் கொண்டு நமது "குடி அரசு' ஏஜண்டுகள் மூலமாகவே எல்லா ஊர்களுக்கும் புத்தகங்களை அனுப்பி விற்பனை செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எங்களுக்கு விற்பனை உரிமை அல்லது சோல் ஏஜன்சி அல்லது மொத்த விற்பனையாகக் கொடுக்க விரும்பும் நமது இயக்கப்புத்தக வெளியிடுவோர்கள் முழு விபரங்கட்கு எழுதித்தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்,
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரிவீதி, ஈரோடு.

# சிந்தனைத் திரட்டு

[பெரியார் அவர்கள் பற்பல சந்தர்ப்பங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்து திரட்டிய அரிய சில கருத்துக்களின் தொகுப்பைக் கீழே வெளியிடுகிறோம்—ஆசிரியர்]

"மேலுலகம்" என்பதும் "தேவலோகம்" என்பதும் கண்ணினால் பார்க்கக் கூடியவைகளாகவோ மனிதன் போய் வரக்கூடியவைகளாகவோ இருந்திருந்தால் பார்ப்பனர்கள் இவ்வளவு புளுகு புளுகி இருக்கமாட்டார்கள்.

0 0

மதம் என்றால் என்ன? அது எத்தகைய? எப்பொழுது செய்தது? யார் செய்தது? யாருக்காகச் செய்தது? எது சரி? எது தப்பு? என்பவைகளைத் தேடிக்கொண்டு திரிவதைவிட இயற்கை என்ன சொல்லுகின்றது? உன் புத்தி என்ன சொல்லுகின்றது? என்பதைக் கவனித்தால், அது சீக்கிரத்தில் உன்னை நல்வாழ்க்கையில் உனக்குத் திருப்தியும் சாந்தியும் உண்டாகக்கூடிய வாழ்க்கையில் கொண்டு விட்டு விடும்.

0 0

மதத்தில் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு இடமிருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? அது மக்கள் வாழ்க்கைக்கு அவசியமா? இல்லையா? அதனால் மக்கள் கஷ்டம் நீங்குமா? நீங்காதா? என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

0 0

மதத்தை நம்பாதவர்களும மதப்படி நடக்காதவர்களுமே மதம் மதம் என்று நம்மைத் தொல்லைப்படுத்துகிறார்கள்.

0 0

என் கஷ்டத்தை சாஸ்திரமும், மதமும், கடவுளும் கவனிக்கவில்லை. ஆனால் நான் என் அவைகளை மதிக்க வேண்டும்.

0 0

மனிதனின் அடிமைத்தனத்திற்கு மூன்று காரியங்கள் இப்போது முக்கியமாய் இருந்து வருகின்றது. அவைகளாவன:

அ. யாரோ ஒருவன், எதோ ஒரு காலத்தில் என்னமோ ஒரு பாஷையில் யாருக்காகவோ, என்ன உத்தேசத்தின் மீதோ, சொன்னதாக யாராலோ எழுதி வைக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு பின்பற்ற சம்மதிப்பது.

ஆ. மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்று பயப்படுவது.

இ. நாம் இறந்து போனால் நமது பெண்டு பிள்ளைகளுக்கு என்ன கதி என்று நினைப்பது.

0 0

காங்கரசக்காரர்கள் சீர்திருத்தக்காரரையும் வைதீகர்களையும் ஏமாற்றி அதிகாரமும் பதவியும் பணமும் சம்பாதிக்கப் பார்க்கிறார்கள். உதாரணமாக,

வைதீகர்களிடம் சென்று ஓ! வைதீகர்களே! எனக்கு ஓட்டுக்கொடுங்கள்; நான் சட்டசபைக்குச் சென்று எவ்வித சீர்திருத்தச் சட்டமும் செய்யப்படாமல் முட்டுக்கட்டை போட்டு காப்பாற்றுகிறேன் என்கின்றார்கள்.

0 0

சீர்திருத்தக்காரர்களிடம் வந்து ஓ! சீர்திருத்தக்காரர்களே! எனக்கு ஓட்டுக் கொடுத்து சட்டசபைக்கு அனுப்புங்கள்; எவ்வித சீர்திருத்தம் வேண்டுமானாலும் சட்டம் செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி இருவர்களையும் ஏமாற்றுகிறார்கள்.

0 0

கோவில்கள் சாமிக்காக கட்டியதல்ல. மற்றெதற்காக என்றால், ஜாதியைப் பிரித்துக் காட்டி மக்களைத் தாழ்த்தவும், பணம்பறித்து, ஒரு கூட்டத்தார் பிழைக்கவும், மக்களை அறியாமையில் வைத்து அடிமைகளாக்கவும் கட்டப்பட்டதாகும்.

0 0

ரயிலும், மோட்டாரும், ஆகாயக் கப்பலும் போக்குவரவு சாதனங்களும் இல்லாத காலத்தில் புளுக ஆரம்பித்தால் ஜனங்கள் கண்டுகொள்ளமாட்டார்கள் என்று கருதி பூலோகத்தில் இமய மலையை கைலயங்கிரி (வெள்ளி மலை) என்றும், பால் கடல், தயிர் கடல் என்றும், சிரஞ்சீவிகளும், சித்தர்களும் இங்கு இருக்கிறார்கள் என்றும், மற்றும் இதுபோல் ஆசைதீரப் புளுகிவைத்தான்.

0 0

நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்களின் ஒழுக்கமே முக்கியமானது. ஆனால் நமது நாட்டில் மதமும் மூடநம்பிக்கையும் ஒழுக்கத்திற்கு நிரந்தர விரோதமாயிருக்கின்றன.

0 0

சுயமரியாதை இயக்கமானது வெறும் நம்பிக்கையை மாத்திரம் அடிப்படையாகக்கொண்ட எந்த மதத்திற்கும் விரோதமானதுதான்.

0 0

ஒரு மனிதன் தனக்கு மோட்சத்தில் இடம் பிடிப்பதற்குஆக வெகுபேர்களை நரகத்தில் (துக்கத்தில்) அழுத்துகிறான்.

0 0

மாடுகள் தினவெடுத்துக்கொண்டால் உராய்ந்துகொள்வதற்கு தேய்ப்புக்கால் அடித்து நட்டுவைக்கும் இந்துமக்கள் விதவைகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள்?

0 0

மணமென்பது மணமக்களின் மன மொத்ததேயாகும்.

0 0

ஒரு குறிப்பிட்ட பண்டிதனை விபசாரி மகன் என்று ஒரு காவியம் எழுதி அதில் அவனையே தன் தாயின் விபசார வியாபாரத்திற்குத் தரகனாய் வைத்து அருமையான கற்பனைகளைக்கொண்டு பாடியிருந்தால் அந்தப்பண்டிதன் அந்தக் காவியத்தின் இன்பத்திற்கும் பொருட்சுவைக்கும் கற்பனை அலங்காரத்திற்கும் ஆசைப்பட்டு அக்காவியத்தை படிப்பானா, காப்பாற்றுவானா? ஓ காவியக்காரர்களே! பதில் சொல்லுங்கள். கம்பராமாயணம் அதில் சேர்ந்ததா அல்லவா?

0 0

பெரியபுராணமும் ராமாயணம் பாரதமும் உள்ளவரை ஜாதிபேதமும் வருணாச்சிரமமும ஒழியவே ஒழியாது!

0 0

சைவமும் வைணவமும் வருணாச்சிரம மதமே ஒழிய சமரச சமயமல்ல. எப்படிஎனில் விபூதி பூசினால்தான் சைவன். நாமம்போட்டால்தான் வைணவன். தீட்சையும் சமாசனமும் (முத்திரையும்) பெற்றால்தான் உயர்ந்தவன் என்று மேற்படி இருமதமும் நிபந்தனை கொண்டிருக்கிறது.

0 0

கல்லைக் கடவுள் என்று கும்பிடும் மனிதன் பார்ப்பனனைச் சுவாமி என்று கும்பிடுவதில் அதிசயமொன்றுமில்லை.

0 0

சுயமரியாதைக்காரர்கள் கடவுளை ஒழிப்பதில்லை என்றையதினம் மனிதனுக்கு ஆராய்ச்சி அறிவு ஏற்பட்டதோ அன்றே கடவுள் செத்துப்போய் விட்டது.

ஆனால், நமதுநாட்டில் அந்த செத்த பிணம் அழுகி நாறிக்கொண்டிருப்பதை எடுத்துத் புதைத்து நாறின இடத்தை லோஷன் போட்டுக் கழுவிச் சுத்தம் செய்கின்ற வேலையைத்தான் சுயமரியாதைக்காரர்கள் செய்கிறார்கள்.

0 0

பார்ப்பனர் நம்மைச் சூத்திரர்கள் என்று கூப்பிட்டால் நாம் அவர்களை மிலேச்சர்கள் என்று கூப்பிட்டு வழக்கப்படுத்தவேண்டும்.

Edited, Printed and Published by N. Karivaradasamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.